Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

MONDAY, APRIL 28 2025

திங்கட்கிழமை 28, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 206 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## பொன்னர் சங்கர் கூத்தில் பெரும் சோகம்:

# கம்ப மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்



■ பி.கேதீஸ்

நாட்டுப்புற கூத்துக்களில் ஒன்றான பொன்னர் சங்கர் கூத்தில், கம்ப மரணத்தில் ஏற்றியவர், அங்கிருந்து அருள்பாலித்து விட்டு, இறங்கும் போது கால் இடறி விழுந்து மரணமடைந்துள்ளார். இந்த சோகமான சம்பவம், நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை(27) காலை இடம்பெற்றுள்ளது.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த எம். சதாசிவம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் சனிக்கிழமை (26) இரவு ஆரம்பிக்கப்பட்ட பொன்னர் சங்கர் கூத்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நிறைவுக்கு கொண்டுவரப்படவிருந்தது.

திறந்தவெளியில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட கூத்தின் நிறைவில், மரக்கம்பத்தில் ஏறி, அதன் உச்சியில் இருந்து அருள்பாலித்து விட்டு இறங்க வேண்டும். அதனடிப்படையில், 50 அடிக்கும் அதிகமான உயரத்தில் நாட்டப்பட்டிருந்த கம்பத்தில் ஏற்றியவர், இறங்கும் போது கீழே விழுந்து மரணமடைந்துள்ளார்.



தொடர்ச்சி P2

## பல்கலைக்கழக நுழைவுக்கு

# 177,588 பேர் தகுதி

2024ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த மொத்தம் 177,588 மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சை பெறுபேறுகள், சனிக்கிழமை(26) இரவு வெளியிடப்பட்டன.

222,774 பாடசாலை பரீட்சார்த்திகளில் 149,964 மாணவர்களும், 51,587 தனிப்பட்ட பரீட்சார்திகளில் 27,624 பேருமென உட்பட மொத்தம் 177,588 பேர் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அதே நேரத்தில், 420 பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் 36 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் உட்பட 456 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், தங்களுடைய பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில், பரீட்சை சுட்டெண் உடன் பகிர வேண்டாம் என்றும், பல்கலைக்கழகங்களுக்கு மற்றுமொரு நபர்,

தொடர்ச்சி P2

# “தமிழர்களின் நம்பிக்கையை சீர்குலைக்க மாட்டோம்”



பாதுகாப்பு காரணங்களுக்காக வடக்கு, கிழக்கில் அரசாங்கம் கையகப்படுத்திய அனைத்து காணிகளையும் மிக விரைவில் விடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் சனிக்கிழமை (26) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

காணிகளை விடுவித்து மக்கள் விவசாயம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தாம் சிங்கள மக்களுடன் அதிகளவில் நெருங்கிப்பழகுகின்ற போதிலும் அவர்கள் மத்தியில் அதிகளவில் பொதுக் கூட்டங்களை நடத்திய போதிலும் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை கடுகளவேனும் சீர்குலைக்கப் போவதில்லை என ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தினார்.

எனவே, மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை பலப்படுத்தும் செயற்பாடுகளையே எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் தமது அரசாங்கத்தின் செயற்பாடுகளால் தமக்கு வாக்களிக்காத மக்களிடமிருந்தும் தம்மீது நம்பிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# இன்று இலங்கை வரும் ஐரோப்பிய பிரதிநிதிகள்




ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை(28) இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் (GSP+) வரிச் சலுகைக்கான நிபந்தனைகளின் முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்வதற்காக குறித்த குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நாளைமறுதினம் முதல் எதிர்வரும் 07ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “ஜனாதிபதி தெரிவித்த இரு தரப்புக் கூட்டு அறிக்கை எங்கே?”

சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பது ஜனாதிபதியின் பொறுப்பாக அமைந்து காணப்பட்டாலும், ஜனாதிபதி வீண் பேச்சுக்களையும் பொய்களையுமே கூறி வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, தேர்தல் நெருங்கும் நேரத்தில் கிராமத்தின்,

தொடர்ச்சி P2

# மே தின பேரணி



தேசிய தொழிலாளர் தினத்தன்று தேசிய மக்கள் சக்தி இயக்க அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின பேரணியை எதிர்வரும் வியாழக்கிழமை (மே 1) கொழும்பில் உள்ள காலி முகத்திடலில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில், அரசாங்கத் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெறும் இந்த மே தினக் கூட்டத்திற்கான அணிவகுப்பு நடத்துவது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில்,

தொடர்ச்சி P2

# “2026 முதல் தொந்தரவு இல்லாத கல்வி முறை ஆரம்பம்”



எதிர்வரும் 2026ஆம் ஆண்டு முதல் தொந்தரவு இல்லாத கல்வி முறை ஆரம்பமாகும் என்றும் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு, பரஹாதெனியவில் சனிக்கிழமை (26) அன்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஒவ்வொரு துறையிலும் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து, திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து, தேவையான திறமையான உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசாங்கம் செயற்படுகிறது. அந்தத் திட்டங்களைக் கிராமத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தத் தேர்தல் எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசியலின் உயர் மட்டங்கள் தூய்மைப்படுத்தப்பட்டது போல, கீழ் மட்டமும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். எங்கள் போட்டி குழுக்களுக்கு வெவ்வேறு நலன்கள் உள்ளன என்பதையும்,

தொடர்ச்சி P2



## ஈரான் துறைமுக வெடிவிபத்து

# பலி 14 ஆக அதிகரிப்பு; 750 பேர் காயம்

ஈரானில் அமைந்துள்ள பந்தர் அப்பாஸ் பகுதியில் உள்ள ஷாஹித் ராஜாயி துறைமுகத்தில் சனிக்கிழமை (26) அன்று ஏற்பட்ட சக்திவாய்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளதுடன் 750க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்ற தகவலை ஈரான் நாட்டின் அரசு செய்தி நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# விசாரணை ஆணைக்குழுவில் இன்று ஆஜராகும் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க மீது அளித்த வாக்குமூலம் தொடர்பாக இன்று திங்கட்கிழமை (28) காலை 9.30 மணிக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் (CIABOC) ஆஜராவார் என்று அவரது வழக்கறிஞர்கள் ஆணைக்குழுவிற்கு தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஊழல் வழக்கு தொடர்பாக அவர் அளித்த வாக்குமூலம் தொடர்பாக, ஏப்ரல் 17ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுற்கு ரணில் விக்ரமசிங்க முதலில் அழைக்கப்பட்டார்.



முந்தைய சம்மனுக்கு பதிலளிக்கும் விதமாக, ரணில் விக்ரமசிங்க, ஆணையத்தில் ஆஜராகத் தயாராக இருப்பதாகவும், புத்தாண்டு விடுமுறை காலத்தில் தனது வழக்கறிஞர்கள் கொழும்பில் இருக்க மாட்டார்கள் என்பதால் வேறு திகதியைக் கோருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.


தொடர்ச்சி P2

# “நான் இந்தியாவின் மருமகள்”

## பாக். பெண் சீமா தெரிவிப்பு

இந்திய மத்திய அரசின் சமீபத்திய நடவடிக்கைகளால் அச்சமடைந்துள்ள பாகிஸ்தான் பெண் சீமா ஹைதர், “நான் இந்தியாவின் மருமகள், என்னை இங்கேயே இருக்க அனுமதிக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 2023, ஜூலையில் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தவர் சீமா ஹைதர். பாகிஸ்தானின் சிந்து மாகாணம், கராச்சி நகரைச் சேர்ந்த இவர், தனது இந்தியக் காதலர் சச்சின் மீனாவை திருமணம் செய்துகொள்வதற்காகப் பாகிஸ்தானை விட்டு வெளியேறினார். ஏற்கெனவே திருமணமான சீமா ஹைதர், 4 குழந்தைகளுக்குத் தாய் ஆவார்.



தொடர்ச்சி P2

# “கண்டி குப்பைக்கூளங்களாக மாற அரசாங்கமே காரணம்”

அரசாங்கத்தின் திறமையின்மையால் கண்டி நகரம் முழுவதும் குப்பைக்கூளங்களாக மாறியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மேலும், மலம், சிறுநீர் உள்ளிட்ட குப்பைகள் குவிவதால் பல்வேறு நோய்கள் பரவி கண்டி ஒரு பரந்த நகரமாக மாறக்கூடும் என்றும் அவர் கூறினார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கம்ப மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

இந்த கம்ப மரத்தில் 'பெரிய காந்தி' எனும் கதாபாத்திரத்தில் நடித்தவர், கம்ப மரத்திலேறி சில நிமிடங்கள் தவம் செய்து, பூஜை செய்ததன் பின்னர் அதிலிருந்து இறங்குவார். அவ்வாறு இறங்கும்போது இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

கம்ப மரத்திலிருந்து விழுந்த நபர், சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், ஆனால் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பல்கலைக்கழக...

அந்த சுட்டெண்ணை குறிப்பிட்டு விண்ணப்பித்துவிட்டால், உரிய காலத்தில் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதில் சிக்கல் ஏற்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மே தின பேரணி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில், அதன் தலைவர்களின் பங்கேற்புடன், தலவாக்கலை நகரில் மே தினக் கூட்டத்தை நடத்த ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் மே தினக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதுடன், நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கொழும்பிலும் மே தினக் கூட்டங்களை நடத்தவுள்ளனர்.

மே தினக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் எடுக்கவில்லை.

இந்த நாட்டில் உள்ள பல அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தீவின் பல்வேறு பகுதிகளில் மே தினக் கூட்டங்களை நடத்த ஏற்கெனவே முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலி 14 ஆக அதிகரிப்பு; 750 பேர் காயம்

ஈரான் தலைநகரில் தெஹ்ரானில் இருந்து சுமார் 1,000 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த துறைமுகத்தில் வெடிவிபத்து ஏற்பட்டதும் வான்வழியாக ஹெலிகொப்டர் மூலம் தீயை அணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி அருகே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. உலக அளவிலான எண்ணெய் விநியோக பணியில் இந்த பகுதி முக்கியமானதாக உள்ளது. துறைமுகத்தில் இருந்த ரசாயனங்களை மிகவும் மோசமான முறையில் பராமரிப்பின்றி அலட்சியமாகக் கிடங்குகளில் வைத்திருந்ததுதான் காரணம் என்கிறார் ஈரானின் நெருக்கடி மேலாண்மை அமைப்பின் செய்தித் தொடர்பாளராக ஹுசைன் சபாரி. "கொள்கலன்களுக்குள் வைக்கப்பட்டிருந்த இரசாயனங்கள் தான் இந்த வெடிவிபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. இதற்கு முன்பு பாதுகாப்பு அமைப்பு சார்ந்தவர்கள் ஆய்வு நடத்திய போது, இந்த துறைமுகத்தில் இருக்கும் அபாயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன" என அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் ஈரான் அரசு தரப்பில் இந்த வெடிவிபத்துக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதேநேரத்தில் ரசாயனங்கள் இந்த விபத்துக்கு காரணமாக அமைத்திருக்க வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், சம்பவ இடத்துக்கு அமைச்சர் ஒருவரையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

துறைமுகத்தில் வெடிவிபத்து ஏற்பட்ட நிலையில் தீயின் தீவிரம் சுமார் 10 மணி நேரம் வரை நீடித்ததாக உலக செய்திகளை வெளியிட்டு வரும் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனால் ஈரான் அரசின் முழு கவனமும் தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவது மற்றும் அணைப்பது என இருந்துள்ளது. இந்த விபத்து காரணமாக பந்தர் அப்பாஸ் பகுதியில் சுமார் 23 கிலோமீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள பள்ளிகள், அலுவலகங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கரும்புகை காற்றில் பரவியது இதற்கு காரணம் என தகவல் கிடைத்துள்ளது.

இந்த விபத்தில் எண்ணெய் உற்பத்தி சார்ந்து எந்த பாதிப்பும் இல்லை என ஈரானின் தேசிய எண்ணெய் பொருட்கள் சுத்திகரிப்பு மற்றும் விநியோக நிறுவனம் கூறியுள்ளது. இது தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "ஷாஹித் ராஜாயி துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிப்பு மற்றும் தீ விபத்துக்கும் எங்கள் நிறுவனம் தொடர்பான சுத்திகரிப்பு நிலையங்கள், எரிபொருள் தொட்டிகள், விநியோக வளாகங்கள் மற்றும் எண்ணெய் குழாய்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இதனால் இங்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை" என கூறப்பட்டுள்ளது.

என்ன நடந்தது? - ஈரானின் ஹார்மோஸ்கான் மாகாணம், பந்தர் அப்பாஸ் நகருக்கு அருகே உள்ள ஷாஹித் ராஜாயி துறைமுகத்தில் உள்ள சினா கொள்கலன் யார்டில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டுத் தீப்பிடித்து எரிந்தது. இதனால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. அப்பகுதியில் இருந்து கரும்புகை மற்றும் நெருப்பு பந்து எழும் காணொளி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளன. கட்டிடம் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தது தொடர்பான காணொளியும் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு சென்று தீயை அணைக்கும் பணியிலும் மீட்புப் பணியிலும் ஈடுபட்டனர். இந்த விபத்தில் பல கன்டெய்னர்கள் வெடித்துச் சிதறியதாக கூறப்படுகிறது. இதுவரை 14 பேர் உயிரிழந்ததாகவும் 750-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹார்மோஸ்கான் மாகாண நெருக்கடி மேலாண்மை நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார். பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

2020இல் சைபர் தாக்குதல் - கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் இதே துறைமுகத்தில் மிகப்பெரிய சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டது. இதனால் அங்கிருந்த கணினிகள் செயலிழந்து, பல நாட்களுக்குப் போக்குவரத்து குளறுபடி ஏற்பட்டது.

புதிய அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் அதிகாரிகள் இடையே ஓமனில் 3ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், இந்த வெடி விபத்து நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# "2026 முதல் தொந்தரவு இல்லாத கல்வி முறை ஆரம்பம்"

இது எதிர்க்கட்சியின் அரசியல் இருப்புக்கான விடயம் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், எங்களுக்கு இருப்பு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அரசாங்கத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு எமக்கு ஒரு சரியான நிர்வாக முறைமை இருக்க வேண்டும்.

ஓகஸ்ட் மாதத்திற்குள் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வருவார் என்று ஐக்கிய தேசிய கட்சி கூறியிருப்பதைக் கண்டேன். அது எப்படி நடக்கும் என்று எனக்கு தெரியவில்லை. பின்னர் சஜித் பிரேமதாச டிசெம்பர் மாதத்திற்குள் தான் ஜனாதிபதியாகிவிடுவேன் என்றார். இந்த கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன என்று எனக்கு தெரியவில்லை.

நகைச்சுவையான இத்தகைய கருத்துக்களை நாம் அனுதாபத்துடன் பார்த்து நம் வழியில் செல்ல வேண்டும். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், எமது பயணம் சீராக நடைபெறுவதை உறுதிசெய்ய எமக்குத் தேவையான குழுவைத் தெரிவு செய்து அனுப்புவதுதான்.

ஜனாதிபதி பதவிக்கு வந்ததிலிருந்து அரசியல் கலாசாரத்தில் நாம் ஏற்படுத்திய மாற்றத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த நாட்டு மக்களுக்கு சுமையாக இல்லாத வகையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். அரசியல்வாதிகள் தங்கள் விருப்பப்படி நடந்துகொள்ள நாங்கள் அனுமதிப்பதில்லை.

மேலதிக செலவுகள், வீண் விரயம் மற்றும் திருட்டு அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இனிமேல் நாம் யாரையும் திருடியதாகக் குற்றம் சாட்ட முடியாது.

அது மட்டுமல்லாமல், இன்னும் மேலே சென்றால், குறைந்தபட்சம் இந்த கல்வி முறையில் அறிவு, அணுகுமுறைகள் மற்றும் திறன்கள் முறையாக வளர்க்கப்படவில்லை என்பதுதான் இதன் பொருள், இது ஒரு பெரிய சமூக நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

உயர் தர பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அவர்கள் பாடசாலைக்குச் செல்வது தமது பெயரை பதிவேட்டில் சேர்த்து, பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு மட்டுமே. ஆண் பிள்ளைகள் வேகமாக கல்வியைப் பாதியில் இடைநிறுத்தி வருகின்றனர்.

இதை மாற்ற நாம் தலையிட வேண்டும். பின்னர், கல்வி மூலம், இந்தப் பொருளாதாரத்திலும் இந்த அபிவிருத்தித் திட்டத்திலும் ஈடுபடக்கூடிய திறன்களைக் கொண்டவர்களை உருவாக்க வேண்டும்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் வழங்கப்படுவது பயிற்சி அல்ல, அது பகிடி வதை போன்ற ஒன்று. தங்குமிட வசதிகள் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை, கற்றல் வசதிகள் இல்லை, பதினைந்து ஆண்டுகளில் பாடத்திட்டம் மாறவில்லை, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்ற கற்பித்தல் விரிவுரையாளர்கள் இல்லை. இதையெல்லாம் நாம் சரிசெய்ய வேண்டும்.

ஜேர்மனியில், ஒரு ஆசிரியர் 9 வருட பயிற்சியின் பின்னரேயே பிள்ளைகளுக்கு கற்பிக்க அனுமதிக்கப்படுகிறார், ஆனால், எமது நாட்டில் என்ன செய்கிறார்கள்? அந்த சூழ்நிலை இல்லாவிட்டாலும், தற்போதைய நிலையிலிருந்து முன்னேறுவதற்குத் தேவையான சூழலை நாம் உருவாக்க வேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. சில பாடசாலைகளில் ஆசிரியர்களின் பகிர்வில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. கடந்த காலங்களில் ஆசிரியர்கள் முறையாக ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகளை நாங்கள் திட்டமிட்டு வருகிறோம்.

பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் பாடசாலைகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். மேலும், பிரிவெனா கல்வியில் பல கடுமையான பிரச்சினைகள் உள்ளன. அது பற்றி சரியாக ஆராய்ந்து, தேவைகளை அடையாளம் காணவும், தேவையான பரிந்துரைகளை உடனடியாக வழங்கவும் ஒரு குழு இப்போது நியமிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்குத் தொந்தரவு இல்லாத கல்வி முறை 2026 முதல் ஆரம்பிக்கப்படும். இந்தப் புதிய சீர்திருத்தங்கள் தரம் 1 மற்றும் தரம் 6 க்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

இது பிரபலமடைவதற்கோ அல்லது வாக்குகளைப் பெறுவதற்கோ செய்யப்படவில்லை, மாறாக நம் நாட்டில் கல்வியை மேம்படுத்தும் உண்மையான நோக்கத்துடன் செய்யப்படுகிறது. கிராமிய மட்டத்தில் இவை அனைத்தையும் செயற்படுத்த களத்தில் தூய்மையான தலைமை மிகவும் முக்கியம். மே 6 ஆம் திகதி தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மகத்தான வெற்றியைத் தருவார்கள் என்று தான் நம்புவதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

# விசாரணை ஆணைக்குழுவில் இன்று ஆஜராகும் ரணில்

ஏப்ரல் 7ஆம் திகதி, ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தபோது வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க ஊவா மாகாண சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புத்தொகையை திரும்பப் பெற்றதாக விக்ரமசிங்கே கூறியிருந்தார்.

இந்த விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருப்பது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்ததற்கு பதிலளிக்கும் விதமாகவா என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் கேள்வி எழுப்பினார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஊவா மாகாண சபையின் 1 மில்லியன் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஊழல் தொடர்பான மூன்று தனித்தனி வழக்குகள் தொடர்பாக அவர் மார்ச் 27ஆம் திகதி காவலில் எடுக்கப்பட்டார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பிணை வழங்கியது, ஆனால், பதுளை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் காரணமாக அவர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கூற்றின் படி, மாகாணத்தில் உள்ள பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு பைகளை வழங்குவதாகக் கூறி, சாமர சம்பத் தசநாயக்க மூன்று அரசு வங்கிகளிடமிருந்து நிதி கோரியிருந்தார்.

இரண்டு வங்கிகள் இணங்கி, அவருக்கு ரூ.1 மில்லியன் மற்றும் ரூ.2.5 மில்லியன் வழங்கி, பின்னர் அவை அவரது அறக்கட்டளை கணக்கிற்கு மாற்றப்பட்டன.

இருப்பினும், மூன்றாவது வங்கி நிதி வழங்க மறுத்தபோது, சாமர சம்பத் தசநாயக்க ஊவா மாகாண சபையின் நிலையான வைப்புத்தொகையை அந்த நிறுவனத்திலிருந்து திரும்பப் பெற்றதன் மூலம் பழிவாங்கியதாகக் கூறப்படுகிறது.

அவரது செயல்களால் அரசாங்கத்திற்கு ரூ.17.3 மில்லியன் நிதி இழப்பு ஏற்பட்டதாகக் கூறி, பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வழக்குத் தொடர்ந்தது.

# "ஜனாதிபதி தெரிவித்த...

நகரத்தின் அதிகாரம் குறித்து மக்கள் தெளிவான முடிவை எடுக்க வேண்டும். இந்த முடிவை எடுப்பதில், ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது நாட்டிற்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

தற்போது, சமூகம் கொலைகாரர்களின் பிடியில் சிக்கியுள்ளது. மிருகத்தனம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என்பன சமூகத்தை ஆட்கொண்டுள்ளன. எந்நேரத்தில் எங்கு என்ன நடக்கும் என தெரியாதுள்ளது.

வீடுகளிலும், வீதிகளிலும், பணியிடங்களிலும், நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்னிலையிலும் துப்பாக்கி சூடுகள் நடக்கின்றன. பிள்ளைகள், பெற்றோர்கள், பெண்கள் முன்னிலையிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. சரமாரியாக துப்பாக்கிச் சூடுகளை நடத்தும் பாதாள உலகக் கும்பல்களின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கின்றன.

சட்டத்தின் ஆட்சி பறிபோய் விட்டது. அரசிடம் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கான தேசிய திட்டமொன்று இல்லை. நடக்கும் கொலைகளால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தில்லை என அரசாங்கம் கூறுகிறது. தேசிய பாதுகாப்பு குறித்து டியுஷன் எடுப்பேன் என கூறிய பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு கூட தேசிய பாதுகாப்பு குறித்து டியுஷன் எடுக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பிரஜைகளின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதும், சட்டத்தை அமுல்படுத்துவதும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரச தலைவரின் பொறுப்பாகும். இது ஜனாதிபதியின் பொறுப்பாகும். ஆனால், இந்த ஜனாதிபதியின் கீழ் சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து போயுள்ளது.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு மேலதிகமாக கிராம மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களையும் சமூகப் பாதுகாப்புக் குழுக்களையும் நிறுவி, மக்களின் பங்களிப்புடன் சகல பிரதேசங்களையும் பாதுகாக்க முடியும்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக மக்களை மையமாகக் கொண்டு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் சட்டம் ஒழுங்கைப் பேண முடியும். இதன் ஊடாக பாதாள உலகக் கும்பல்களை மக்கள் பங்கேற்புடன் கட்டுப்படுத்த முடியும். பாதாள குழுக்கல், கப்பம் கோரும் குழுக்கள் மற்றும் கொலைகாரர்களை இல்லாதொழிப்ங்கதற்கு புதிய வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

சமூகத்தில் இக்குற்றங்களைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். வழமையான வழிமுறைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு இவற்றுக்கு தீர்வு காண முடியாது. எனவே, புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் பங்கேற்புடன் இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். புதிய பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்து சிந்திக்க வேண்டும். மேலும், திசைகாட்டி அரசு தலைமையிலான ஜனாதிபதி எழுதிய கடிதத்தால், டொனால்ட் ட்ரம்ப் விதித்த தீர்வை வரி 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டதாக பிரதி அமைச்சர் ஒருவர் பிரஸ்தாபித்தார்.

பின்னர் வேறு ஒரு தூதுக் குழு அமெரிக்கா பயணமாகி கலந்துரையாடல்கள் எமக்கு சாதகமாக இறுதி செய்யப்பட்டுள்ளன என தெரிவித்தனர். இந்த வரியை திருத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த போதிலும், அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை. பட்டப்பகலில் இவ்வாறான பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# "நான் இந்தியாவின் மருமகள்"

இந்நிலையில், தனது 4 குழந்தைகளுடன் நேபாளம் வழியாக சட்டவிரோதாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார். உத்தரப் பிரதேச மாநிலத்தின் கவுதம புத்தர் நகர் மாவட்டம், ரபுபுரா பகுதியில் தனது காதலர் சச்சின் மீனாவுடன் வசித்து வந்தார். அவரை கடந்த 2023 ஜூலையில் அதிகாரிகள் பிடித்துள்ளனர். தற்போது உ.பி.யின் கிரேட்டர் நொய்டாவில் சச்சினுடன் சீமா வசித்து வருகிறார். இந்நிலையில், பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்ட விசாக்களை ஏப்ரல் 27 முதல் இந்திய மத்திய அரசு இரத்து செய்துள்ளது. இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தானியர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் நாடு கடத்தப்படலாம் என சீமா அச்சமடைந்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவு ஒன்றில், "நான் பாகிஸ்தான் மகள். ஆனால், இப்போது இந்தியாவின் மருமகள். நான் பாகிஸ்தான் செல்ல விரும்பவில்லை. நான் இந்தியாவிலேயே இருக்க அனுமதிக்க வேண்டும் என பிரதமர் மோடி மற்றும் உ.பி. முதல்வர் யோகியை வேண்டுகிறேன்" என்று கூறியுள்ளார். மீனாவை மணந்த பிறகு தான் இந்து மதத்தை ஏற்றுக்கொண்டதாக சீமா கூறுகிறார்.

இந்நிலையில், சீமா தொடர்ந்து இந்தியாவில் வசிக்க அனுமதிக்கப்படுவார் என அவரது வழக்கறிஞர் ஏ.பி.சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# "கண்டி குப்பைக்கூளங்களாக...

அரசாங்கம் முன் தயாரிப்பு இல்லாமல் தலதா விஹாரைக்குத் தயாரானதால்தான் இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் எழுந்ததாகக் கூறிய முன்னாள் எம்.பி லக்ஷ்மன் கிரியெல்ல, முன்னாள் ஜனாதிபதிகள் ரணசிங்க பிரேமதாசவும் மஹிந்த ராஜபக்ஷவும் மூன்று மாதங்களுக்கு முன்பே தலதா விஹாரைக்குத் தயாரானார்கள் என்றும் கூறினார்.

மேலும் , தலதா மாளிகை யாத்திரைக்குத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக அன்றைய தினம் சுமார் பதினைந்து கூட்டங்கள் நடத்தப்பட்டதாகவும், ஜனாதிபதிகள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் அவற்றில் பங்கேற்றதாகவும் கூறினார்.






# கோணேஸ்வர பெருமானின் தேர்த்திரு விழா


திருக்கோணேஸ்வரம் - கோணேஸ்வர பெருமானின் வருடாந்த பிரம்மோற்சவத்தின் தேர்த்திரு விழா ஞாயிற்றுக்கிழமை (27) காலை இடம்பெற்றது.

இதன்போது, ஆலயத்திலிருந்து கோணேஸ்வர பெருமான் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் எழுந்தருளி பக்த அடியார்கள் புடைசூழத் தேர்ப் பவனி நடைபெற்றது.

- அ.அச்சுதன்











# தேயிலை தோட்டத்தில் இருந்து அரச மருந்துகள் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

அரசாங்க மருத்துவமனை ஒன்றில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை மருந்துகள் சனிக்கிழமை(26) மதியம் ஹட்டன் ஃப்ரூட்ஹில் தேயிலை தோட்டத்தில் கொட்டப்பட்ட நிலையில், கண்டுபிடிக்கப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதியிலிருந்து ஹட்டன் ஃப்ரூட்ஹில் தோட்டத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் மருந்துகள் ஒரு தொகை கிடப்பதாகத் தோட்ட நிர்வாகத்தால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், ஹட்டன் குற்றப்பிரிவு



அதிகாரிகளால் விசாரணை நடத்தப்பட்டு, ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக மருந்து தொகையை பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மருந்துகள் காலாவதியானவை என்றும், மருந்துகளை இரண்டு பைகளில் வைக்கப்பட்டு தேயிலைத் தோட்டத்தில் கொட்டப்பட்டிருந்ததாகவும், மருந்துகள் விற்பனை தடை என்று எழுதப்பட்ட பல 'லேபிள்கள்' மற்றும் நுவரெலியா பிராந்திய சுகாதார அலுவலகத்தின் பெயர் அச்சிடப்பட்ட மருந்து உறையும் மருந்துகளின் இருப்புக்குள் காணப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

காலாவதியான அரசு மருந்துகளை அப்புறப்படுத்துவதற்கு முறையான நடைமுறை இருந்தபோதிலும், இவ்வாறு தேயிலைத் தோட்டத்தில் கொட்டப்பட்டமை தொடர்பாக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கைகள் வழங்குமாறு நுவரெலியா மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு நீதிமன்றம் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று ஹட்டன் தலைமையக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# "வன்னி எம்.பி. மீதான குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரா"

க.அகரன்



வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது. இவை தொடர்பாக ஜனாதிபதி பொறுப்புக் கூறுவாரா என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் பிரச்சார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்

" வடகிழக்கு தமிழ் மக்கள் ஓரணியாக நின்றால் மாத்திரமே. எமக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு இந்த நாட்டிலே வரும் என்ற நம்பிக்கையில் வாழ முடியும்.இல்லை என்றால் பலமிழந்த ஒரு சமூகமாகவே நாங்கள் தொடர்ந்தும் இருப்போம். தமிழரின் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக தமிழரசுக்கட்சி மாத்திரே இன்று நேர்மையாகச் செயல்பட்டு வருகின்ற ஒரு கட்சி. அதற்கு பல உதாரணங்கள் கூறலாம்.

எங்கள் பிரச்சனைகள் பற்றி சர்வதேச சமூகத்திடம் நாங்கள் மாத்திரமே குரல் கொடுக்கிறோம்.

அண்மையில் வருகை தந்த பாரத பிரதமரை நாம் சந்தித்தோம்.அவரை சந்திப்பதற்கு எமது கட்சியைச் சேர்ந்தவர்களும். ஏனைய தமிழ்த் தேசிய பிரதிநிதிகளையும் மக்கள் பாராளுமன்றம் அனுப்பாவிட்டால் அவரை சந்திக்கும் அரசின் குழுவில் சிங்களவர்கள் மாத்திரமே அங்கம் வகித்தார்கள். அவர்கள் அந்த ரவுடி அமைச்சரையாவது கொண்டு போயிருக்கலாம்.

அண்மையில் முல்லைத்தீவில் மீனவ சங்கத் தலைவர் மீது ரவுடி அமைச்சரின் கும்பல் பலமான தாக்குதலைச் செய்திருக்கின்றது. அவரது அடாவடித்தனத்தைக் காட்டியும் வன்னி மண்ணில் அடிவாங்காமல் போயுள்ளார் என்றார் அமைச்சர் என்ற பதவிக்கு அந்த மக்கள் மரியாதை கொடுத்துள்ளனர்.

இந்த ரவுடி அமைச்சரின் தலைவரான ஜனாதிபதி நேற்று மாங்குளம் சென்றிருந்தார். அங்கு ஒரு தொழிற்பேட்டை வலயம் ஒன்றை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்ட விவாதத்தில் மாங்குளம் என்ற வார்த்தையே வரவில்லை.எனவே தேர்தலுக்காக சொல்லும் பொய் வார்த்தைகளே இவை.

சிங்கள மக்களும் ஜனாதிபதி சொல்வது போல ஒரு தாய் பிள்ளைகளாக வாழலாம் என்ற மன நிலையில் இருப்பதாக நான் நம்பவில்லை. இனவாதிகளான கோட்டபாய அரசாங்கம் தங்களுடைய இனவாத பணியைச் சரியாகச் செய்யத் தவறியமையால் இன்று இந்த இனவாதிகளுக்கு அந்த மக்கள் வாக்களித்துள்ளனர்.

கோட்டாவை விட மோசமான இனவாதிகள் இவர்கள். சிங்கள பேரினவாத நாடாகத் தொடர்ந்து இலங்கையை வைத்திருப்பதே அவர்களது எண்ணம். அதற்குத் தடையாக இருப்பவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே.

இதனை மக்கள் மனதிலே வைத்திருக்க வேண்டும். எதிர்வரும் தேர்தலில் அதனை வெளிப்படுத்த வேண்டும். மக்களின் ஆதரவு எமது கைகளுக்கு வந்தால் மாத்திரமே நாங்கள் செய்யும் போராட்டம் வலுவானதாக இருக்கும்.

ஊழல்வாதிகள் இல்லாத அரசு என்றார்கள் வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியர்களாக இருந்த போது பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்திற்காக வந்த நிதியை மோசடி செய்ததாகக் குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது.விசாரணை செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, பல விடயங்களை நான் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளேன். ரவுடியாக செயற்படும் அமைச்சர்கள் உள்ளனர்.

எனவே ஜனாதிபதி இதற்கெல்லாம் பொறுப்புக்கூறா விட்டால் இந்த தேர்தலில் இந்த அரசு தோல்வியடைவதை எவராலும் மாற்ற முடியாது" என்றார்.

# மின்சாரம் தாக்கி முதியவர் பலி


செ.திவாகரன்

கந்தபளை புதிய வீதி பகுதியில் மரக்கறி தோட்டத்தை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, பாதுகாப்பு வேலியில் இணைக்கப்பட்ட மின்சார இணைப்பில் சிக்கி சனிக்கிழமை(26) காலை முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

கந்தபளை புதிய வீதி பகுதியைச் சேர்ந்த செல்லப்பெருமாள் (வயது 74) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் நீண்ட காலமாகக் குறித்த விவசாயத் தோட்டத்தில் தற்காலிக குடிசை ஒன்றை அமைத்துத் தங்கியிருந்து தினமும் தொழில் புரிந்து வருபவர் எனவும் வழக்கம் போல் தொழில் செய்வதற்குக் காலை விவசாய தோட்டத்திற்குச் சென்றதாகவும் அருகில் வசிப்பவர்கள் தெரிவித்துள்ளனர் .

எனினும், குறித்த முதியவருடன் இணைந்து தொழில் புரியும் ஏனைய தொழிலாளர்கள் நீண்ட நேரமாகியும் முதியவரைக் காணாது அவர் தங்கியிருந்த குடிசையில் தேடி இல்லாததால் விவசாய தோட்டத்தில் தேடிய போது, அவர் சடலமாகக் கிடந்தமை அவதானித்துள்ளனர்.



இதன் பின்னர் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பார்வையிட்டதன் பின்னர் சடலம் மீட்கப்பட்டு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தபளை பொலிஸாருடன் நுவரெலியா தடயவியல் பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

# SLIMFA ஊடக பேரமர்வு ஆரம்பம்

இலங்கை இந்திய ஊடக நட்புறவு சங்கத்தால் (SLIMFA) முதன் முதலாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஊடக பேரமர்வினை இலங்கைக்கான இந்திய பதில் உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே வெகுஜன ஊடகம் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் கொழும்பில் உள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கூட்டாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

02. புதிய ஊடக தோற்றப்பாடுகளை ஒன்றிணைந்து கண்டறிதல் என்ற தொனிப் பொருளில் நடைபெறும் இந்த ஊடகப் பேரமர்வானது 2025 ஏப்ரல் 25 - 26 ஆகிய திகதிகளில் நடைபெறும் அதேவேளை, சமகால ஊடக செல்நெறிகள் மற்றும் ஏனையபுதியஅம்சங்கள் தொடர்பாக இந்த அமர்வுகளில் ஆராயப்பட உள்ளது. அத்துடன் ஊடக துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, கையடக்க தொலைபேசிகள் மூலமான ஊடக செயல்பாடுகள், ஊடகத்துறை அடிப்படையிலான வருமான வழிகள், தரவுகள் சார்ந்த ஊடகவியல், தவறான தரவுகள் மற்றும் உண்மைகளைச் சரிபார்த்தல், கருப்பொருள் உருவாக்கம் மற்றும் ஒலி சார் ஊடகம் உள்ளிட்ட முக்கிய விடயங்களில் இந்த அமர்வுகளின் போது கவனம் செலுத்தப்படும். இலங்கையில் முதல் தடவையாக நடைபெறும் ஊடகத்துறை சார்ந்த குறித்த நிகழ்வானது சிறப்புரைகள், குழுநிலை விவாதங்கள், பக்க அமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கொண்டிருக்கும்.

அத்துடன், தொழில் ரீதியான அபிவிருத்தி மற்றும் இந்தியா இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் இடையிலான ஒத்துழைப்பினை வலுவாக்கல் ஆகியவற்றுக்கு இந்த அமர்வு தனித்துவமான களத்தினை வழங்குகின்றது. இந்தியாவிலிருந்து பங்கேற்கும் நிபுணர்களில் First Post நிறுவனத்தின் முகாமைத்துவ ஆசிரியர் பால்கி சர்மா, WION நிறுவனத்தின் வெளிநாட்டுச் செய்திகள் பிரிவின் உதவி ஆசிரியர் சித்தாந்த் சிபல் இந்தியா டுடே நிறுவனத்தின் பிரதான ஒருங்கிணைப்பு அதிகாரி சைலேஷ் சேகர் மற்றும் TAM ஊடக ஆய்வு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எல்.வி.கிருஷ்ணன் ஆகியோர் உள்ளடங்குவர்.

# முச்சக்கர வண்டியில் மோதி முதியவர் மரணம்

முச்சக்கர வண்டியில் மோதிய முதியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சனிக்கிழமை (26) அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 60 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் கடந்த வியாழக்கிழமை (24) அன்று சைக்கிளில் கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தபோது, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் முச்சக்கவண்டி மோதியதில் அவர் உடல் உபாதைக்கு உள்ளாகியுள்ளார்

இதையடுத்து, அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளதுடன் இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

## வேலைவாய்ப்புகள்

கௌரவமான சேவைக்காக இரு தரப்பினருக்கும் அழைப்பு.
சுதந்திரமாக வேலை செய்யலாம்.
தங்குமிடம் இலவசம்.
குறைந்த விலையில் உணவுகள்.
பம்பலப்பிட்டி, ராஜகிரிய, பொரளை, கொஹுவல, போகுந்தர, கேகாலை, மொனராகலை, இரத்தினபுரி, பலாங்கொட, கொடகவெல, உட்பட நாடளாவிய ரீதியில் YO , OIC , SO , LSO வேலைவாய்ப்புகள்
தொடர்புகொள்ளவும்:
071-8123580, 075-3828200

ராஜகிரியவில் உள்ள ஐஸ் கோன்உற்பத்தி நிறுவனமொன்றில் இயந்திர (machine work) மற்றும் பொதியிடல் (packing) வேளைகளுக்கு ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்புகொள்ளவும்: 077-7775903

# தொந்தரவு இல்லாத கல்வி முறை வரவேற்கத்தக்க அம்சமாகும்

இலங்கையில் கல்வி முற்றிலும் குழப்பமாக உள்ளது என்பதை சகலரும் அறிவார்கள். அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில், தொந்தரவு இல்லாத கல்வி முறை 2026 முதல் ஆரம்பமாகும் என தெரிவித்துள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, “எமது பிள்ளைகளுக்கு அறிவு இருந்தாலும், உலகில் அவர்கள் முன்னேற உதவும் திறன்களையும் மனப்பான்மைகளையும் வளர்ப்பதில் கடுமையான சிக்கல்கள் உள்ளன” என குறிப்பிட்டுள்ளார்.

சி.டப்ளியு.டப்ளியு.கன்னங்கரா இந்த நாட்டின் கல்வி அமைச்சராகும் வரை, மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இங்கிலாந்து மன்னர் ஜார்ஜின் நற்பண்புகளையும், எலிசபெத் மகாராணியின் மாட்சிமையையும் நினைவுகூர்ந்து ஆசீர்வாதங்களைப் பாடிக்கொண்டிருந்தனர்.

கன்னங்கரா கல்வி முறையுடன் அந்தப் பாராட்டு நின்றுவிட்டாலும், இந்த நாட்டுக்காக பிரிட்டனால் உருவாக்கப்பட்ட காலனித்துவக் கல்வி தொடர்ந்தது. காலனித்துவம் என்பது நிலப்பிரபுத்துவத்தின் ஆங்கில அரசியல் வடிவமாகும். இந்த வடிவத்தில், பாடசாலை நிர்வாகப் பிரமுகர்களான பாடசாலை ஆசிரியர், பாடசாலை ஆசிரியை மற்றும் முதல்வர் ஆகியோர் முக்கிய இடத்தைப் பிடித்தனர்.

கொழும்புக்கு வெளியே உள்ள தொலைதூர கிராமங்களில், அறுவடை நாளில் மாணவர்கள் பாடசாலையைத் தவிர்த்துவிட்டு, தங்கள் பெரியவர்களின் வயல்களில் வேலை செய்தனர். மேலும், தோட்ட வேலை காலத்தில், தோட்டத்திற்குச் சென்று மரவள்ளிக்கிழங்குகளை நட்டது. இந்தக் காலத்தில், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

1970ஆம் ஆண்டு இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, இடதுசாரி அரசியல் கூட்டாளிகளுடன் சேர்ந்து, நாட்டின் கல்வியை மாற்றியமைத்தார். இது புதிய கல்வி முறை என்று அழைக்கப்பட்டது. இந்தப் புதிய கல்வி முறையின் நோக்கம், புத்தகக் கல்வி மற்றும் உடல் உழைப்பு ஆகிய இரண்டிற்கும் உயர் மட்ட ஆதரவை வழங்குவதாகும்.

1977ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பின்னர், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனே ஆட்சிக்கு வந்தார், புதிய கல்வி முறை ரத்து செய்யப்பட்டது. அதன் பிறகு, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் இலங்கையை 17 ஆண்டுகள் நேரடியாக ஆட்சி செய்தது. 1994இல் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்கவால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி முறை முற்றிலும் மாறியது.

அரசாங்கங்கள் மாறும்போது அரசியல் கொள்கைகள் மாறினாலும், கல்வி முறை தானாகவே மாறுவதில்லை. இன்று, இந்த நாட்டில் காலனித்துவக் கல்வியோ அல்லது நிலப்பிரபுத்துவக் கல்வியோ இல்லை. அதற்கு பதிலாக, இலஞ்சம் மற்றும் பாலியல் லஞ்சத்தைப் பயன்படுத்தி, முழுக்க முழுக்க பணம் மற்றும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கல்வி முறை நாட்டில் உருவானது.

இந்த நாட்டின் கல்வியில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஒரு பெரிய பிரச்சினை இருந்தது. கல்வி என்பது உலகிற்கு வெளிப்படும் ஒரு முற்போக்கான கல்வி முறையாக இருக்க வேண்டும் என்று கூறினார். எனினும், இந்த நாட்டில் கல்வியை மாற்றவே முடியவில்லை. எனினும், தொந்தரவு இல்லாத கல்வி முறை வரவேற்கத்தக்கது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள்

லக்ஸ்மன்

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்சின் மரணச்சடங்கு சனிக்கிழமை (26) அன்று நடைபெற்றது. இந்தியாவின் காஷ்மீரில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. காசாவில் யுத்தம் ஓயவில்லை. ரஷ்ய- உக்ரைன் மோதல் தொடர்கிறது. இவ்வாறான நிலையில், இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கிறது.

தேர்தல் என்பது கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசும் ஒரு இடமாகவே இருக்கின்றது. ஆனால், மக்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றனவா என்றால், அது முழுமையாக இல்லை. உலகின் பல நாடுகளில் வாக்குறுதிகளில் பெரும்பாலானவையே நிறைவேற்றப்படும். அவ்வாறு இல்லையானால், அரசாங்கமே பதவி விலகுவதும், ஜனாதிபதிகள், அமைச்சர்கள் விலகுவதும், நடைபெறுகின்றன. ஆனால், இலங்கையில் அவ்வாறு நடைபெறுவதில்லை.

வாக்குறுதிகள் வீசப்படுவதும் பின்னர், அதற்கு வேறு ஒரு காரணம் சொல்லி இழுத்தடிக்கப்பட்டு வருவது வழக்கமாகி விட்டது. அரசியல் என்று கூறி விட்டுக் கடந்து போகின்ற போக்கு ஆரோக்கியமானதல்ல. அரசியலில் மாத்திரமல்ல, சாதாரண நடவடிக்கைகளிலும் சில வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றினை நிறைவேற்றமுடியாமல் போகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்பட்டாலும், இலங்கையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலால் அரசியல் குழப்பம் உருவாகி, மாற்றம் ஏற்பட்டு பதவிக்கு வந்த அரசாங்கம் அதற்கான காரணத்தினை இவ்வருடத்தின் நினைவு தினத்துக்கு முன்னர் வெளிப்படுத்துவதாக அறிவித்திருந்த போதும் நடைபெறவில்லை. இதனை எமது நாட்டு அரசாங்கத்தின் இயலாமையாகவே கொள்ள வேண்டும்.

மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான அரசியல் களம் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா, ஏனைய அமைச்சர்கள், என அரசின் அனைத்து மட்டங்களும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. அதே போன்றே ஏனைய அனைத்து எதிர்க்கட்சிகளும் தங்களுக்கான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் வெளிப்படுத்தப்படும் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறுமா என்பது சந்தேகமானதுதான். ஆனால், மக்கள் விடுதலை முன்னணியைத் ( ஜே.வி.பி.) தலைமையாகக் கொண்டு, நாட்டின் ஆட்சியைப் பிடித்துக் கொண்ட தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தும் கருத்துக்கள் ஒரு சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்கிறதா என்று சந்தேகங்கள் உருவாகிவருன்றன.

அரசியலில் சாணக்கியத் தனமாக இருப்பதாகக் கூறிக்கொண்டு கடந்த அரசாங்கங்கள் அனைத்துமே, முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருமே, அமைச்சர்கள் அனைவருமே குற்றவாளிகள் என்ற தோரணையில் முன்னெடுக்கப்படும் வேலைப்பாடுகள், ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற விசாரணைகள், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தேர்தல் பிரசாரங்களில் வெளிவரும் கருத்துக்கள் என நீண்டு கொண்டே செல்கிறது. காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவ்வளவுக்கு சாதாரணமானவை அல்ல. இருந்தாலும் அவற்றை செய்துவிடுவோம், செய்கிறோம் என்ற தோரணையில் நடைபெறும் சில விடயங்களாக இவற்றினைப் பார்க்கலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது தேசிய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், அடுத்தடுத்த தேர்தல்களுக்கான நாடிபிடிப்புகளாக இருப்பது வழக்கம். 2023ஆம் ஆண்டில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்ற காலத்தில் இந்தத் தேர்தலை அறிவித்து விட்டு அதனை பொருளாதாரக் காரணங்களைக் கூறி கைவிட்டிருந்தார். பின்னர் அந்த வேட்பு மனுக்கள் கைவிடப்பட்டு மீண்டும் வேட்பு மனுக்கள் கோரப்பட்டு இப்போது தேர்தல் நடைபெறுகிறது. அன்றைய நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை அவர் நடத்தியிருந்தால் சிலவேளைகளில் தேசிய அரசியல் வேறு விதமாக இருந்திருக்கலாம்.

இப்போது, ஜனாதிபதியாக ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார இருக்கிறார். அரசாங்கத்தினை தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் வைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை யார் கைப்பற்றுவார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததாகவும் இருக்கிறது. தமிழர் பகுதி வேறு விதமாகவும் தெற்கு, மலையகம் வேறு விதமாகவும் இருக்குமா என்பது சற்று உறுதியற்றே இருக்கிறது. ஆனாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வீழ்ச்சியை சந்திக்கும் என்று ஆரூடம் கூறி வருகின்றனர். வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதும், பின்னர் தங்கள் தவறுகளைப் பற்றிச் சிந்திக்காதவர்களாகவும் இருக்கின்ற இலங்கை மக்களிடம் இது எவ்வாறு சாத்தியப்படும் என்பது வேறுகதை.

மாகாண சபைத் தேர்தல் இதுவரை ஏன் நடத்தப்படவில்லை. அதற்கான காரணம் என்ன? ஆளும் கட்சியின் தேர்தல் தோல்வியில் பயமா? இல்லை அதற்கிடையில் ஏற்பட்ட சட்டச் சிக்கலா? அப்படியாயின், அச் சட்டச்சிக்கல் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அதற்கு யார் காரணம்? ஏன்பது பற்றியெல்லாம் பல கேள்விகள் கடந்த காலங்களில் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றுக்கு அப்போதைய அரசாங்கங்கள் பதில் வழங்கவில்லை. இருந்தாலும், 2024 ஒக்ரோபரில் புதிய ஜனாதிபதி தெரிவானதுமுதல் நடைபெறத் தொடங்கிய மாற்றம் அத் தேர்தலையும் இவ்வருடத்தில் நடத்தும் என்று நம்பலாம். கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பாக நாட்டின் எதிர்க்கட்சிகளும் சிவில் அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வெகுசன ஊடகங்களும் காட்டிய அக்கறையில் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக ஒரு துளியேனும் காட்டவில்லை என்பது இப்போதும் ஒரு குற்றச்சாட்டாகவே இருக்கிறது.

இந்த நிலையில்தான், இந்த உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுகிறது. இருந்தாலும், இப்போது அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கு தேசிய மக்கள் சக்தியின் அடுத்த மாகாண சபைக் கனவும் காரணமே.

உள்ளூராட்சித் சபைகள் தங்களது பிரதேசத்திற்குள்ளே இருப்பவர்களைக் கொண்டு பிரதேசக் கிராமங்களின் வீதி அபிவிருத்தி, நலமேம்பாடு, வீதி அபிவிருத்தி என நகர்வதாக இருந்தாலும், அரசியல் கட்சிகள் வேறு வேறு இலக்குகளுடன் நகர்வது தான் வழமையாகும். தற்போதைய அரசியல் களத்தில் இரண்டு விடயங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

அதில் ஒன்று, வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழர்களின் அரசியலில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நடந்த தேசிய கட்சியொன்றுக்குப் பெரும்பான்மை வழங்கிய நிலையை மாற்றியமைத்தல், தமிழர்களுடைய பிரச்சினைகளுக்காகத் தீர்வுகளைக் கண்டடைவதற்கான வழியைத் தேடுதல் போன்றவையாகும். தேசிய அளவில் இதற்கு மாற்றான விடயங்களே காணப்படுகின்றன.

நடைபெறுகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களுக்கும் இனப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்ற விமர்சனங்களுக்கு மத்தியிலும் தேசியக் கட்சிகளை விமர்சிப்பதும் அக் கட்சிகளின் தமிழ் மக்கள் விவகாரம் குறித்திருக்கின்ற கொள்கைகளை ஆராய்வதும் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் தமிழ்த் தேசிய அரசியல் சார்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி போன்ற கட்சிகள் தமக்குள் அரசியல் போட்டியுடனேயே நகர்கின்றன.

இருந்தாலும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களின் காலச்சூழலுக்கும் இப்போது நடைபெறுகின்ற உள்ளூராட்சித் தேர்தல் களக் காலச்சூழலுக்கும் பெரியளவான வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆரம்பகாலம் மிகவும் வெளிப்படையான, பரஸ்பர ஒற்றுமையான மக்கள் சமூகங்கள் இருந்தன. அதன் பின்னர், கொஞ்சம் கொஞ்சமாக உருவான அரசியல் குழப்பங்கள் மக்களின் மனோநிலைகளில் மாறுபாடுகள் ஏற்பட்டன. போராட்டங்கள் வெடித்தன. வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்றிருந்தது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பின்னர், ஊழல் தலைதூக்கியது. பொருளாதாரச் சிக்கல் வந்து சேர்ந்தது. பின்னர் ஆட்சி அதிகார மாற்றங்கள் ஏற்பட்டு இப்போது நாட்டின் அனைத்துப் பிரதேசத்திலும் ஒரு தேசிய அரசியல் கட்சி ஆட்சியில் இருக்கிறது.

இவ்வாறான நிலையில், 1948 சுதந்திரத்திற்குப் பின்னரான எமது நாட்டின் அரசியல் வரலாற்றில் நோக்கக்கூடிய விசேட அம்சமாக நடைபெறுகின்ற இந்த உள்ளூராட்சித் தேர்தல் ஆளும் கட்சி எத்தகைய திட்டங்களை, அது மக்கள் நலன் சார்ந்த திட்டங்களாக இருக்கிறதா, ஏனைய கட்சிகள் எவ்வாறான திட்டங்களை முன்வைக்கின்றன அது பயன்பாடானதா? என்ற கேள்விகளுக்கிடையில் மக்கள் தங்களுக்கான வியாக்கியானங்கள் குறித்துச் சிந்திப்பார்களா என்பது தேர்தல் முடிவுவரைக்குமானதாகத்தான் தெரிகிறது.

எவ்வாறானாலும், அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள் மக்களின் எதிர்காலத்தினை மேம்படுத்துவதாக இருக்கின்ற போதுதான் தேர்தல் வாக்குறுதிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். காலங்காலமாக ஏமாற்றும் நகர்வுகளுடனேயே நகரும் கட்சிகள் அது பற்றிச் சிந்திப்பதற்கான சூழல் இந்த உள்ளூராட்சித் தேர்தலிலேனும் நடைபெற வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

# கழிவுப் பொருட்களால் அசௌகரியம்



யாழ். மாநகர சபையின் கழிவுகள் கொட்டப்படும் இடமான கல்லுண்டாய் பகுதியில், கழிவுப் பொருட்களுக்கு தீ மூட்டியதால் வீதியில் செல்லும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பகுதியானது மானிப்பாய் பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படுகிறது. அந்த பகுதியில் மாநகர சபையினர் கழிவுகளை கொட்டுகின்றனர். இவ்வாறு கொட்டப்படுகின்ற கழிவுகள் இதற்கு முன்னரும் பல தடவைகள் எரியூட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு அடிக்கடி எரியூட்டி வருவதால் புகையும், துர்நாற்றம் வீசுவதுடன், வீதியில் பயணிக்கும் பயணிகளை பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே ,மாநகர சபையின் இந்த செயற்பாட்டுக்கு மக்கள் கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பு.கஜிந்தன்




# கொமர்ஷல் வங்கியும் மைக்ரோ கார் நிறுவனமும் கைகோர்ப்பு

கொமர்ஷல் வங்கியானது மைக்ரோ கார்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு முழு வரிசைக்கும் கவர்ச்சிகரமான லீசிங் தெரிவுகளை வழங்குவதற்காக, மைக்ரோ கார்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் மூலோபாய பங்குடைமை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த பங்கு உடைமைக்கிணங்க, இரு நிறுவனங்களும் லீசிங் வசதியில் வாகனங்களை கொள்வனவு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கவுள்ளன. இந்த பங்குடைமைக்கான ஒப்பந்தமானது மார்ச் 31, 2026 வரை நடைமுறையில் இருக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

இந்த சலுகைகள் இலங்கையில் மைக்ரோ கார்ஸ் நிறுவனத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் MG, Chery, Proton, KGM SUV கள் மற்றும் Higer சொகுசு பேருந்துகள் உட்பட அனைத்து வர்த்தக நாமங்களுக்கும் பொருந்தும்.

இந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், Chery Tiggo4Pro SUV விலையில் ரூ.50,000 விலைக்கழிவு, Proton Saga கார்களுக்கு முதல் ஆண்டு முழு காப்புறுதித் தொகை மற்றும் இரண்டு ஆண்டுகள் அல்லது 40,000 கி.மீ. சேவை பொதி இலவசமாக வழங்கப்படுவதுடன் Rexton Sports பிக்-அப்களை கொள்வனவு செய்யும் முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு இலவச பதிவு ஆகியவற்றை வழங்க மைக்ரோ கார்ஸ் உறுதியளித்துள்ளது.

MG வாகன வரிசைகளை எடுத்துக்கொண்டால் MG ZS MCE யை கொள்வனவு செய்யும் முதல் 300 வாடிக்கையாளர்களுக்கு நிறுவனம் சிறப்பு அறிமுக விலையையும், MG ZS Hybrid+, MG HS PHEV, MG5 Sedan, MG S5 EV மற்றும் MG4 EV வாகனங்களை பெற விரும்புபவர்களுக்கு சிறப்பு விலைகளையும் வழங்கவுள்ளது.

மேலும் கொமர்ஷல் வங்கியானது இந்த கூட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம், தற்போதைய மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் புதிய வாகனத்தைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள உதவும் வகையில், கவர்ச்சிகரமான மற்றும் நியாயமான விலையில் லீசிங் திட்டங்களுடன் தனிப்பயனாக்கப்பட்ட கட்டணத் திட்டங்களை வழங்கவுள்ளது.

வங்கியின் உயர் லீசிங் வசதியின் கீழ், ஏழு வருட லீசிங் வசதிக்கு, ஒவ்வொரு ரூ.100,000 க்கும் ரூ.1,598.00 என்ற வாகன லீசிங் வாடகையில் கொமர்ஷல் வங்கி மிகக் குறைந்த கட்டணத்தை வழங்குகிறது.

# World Down Syndrome Day நிகழ்வுகள் அனுஷ்டிப்பு




Hemas Outreach Foundation' இன் (HOF) World Down Syndrome Day நிகழ்வுகள், 'Eka Se Salakamu' (Treat All Alike) சமூக முன்னெடுப்பின் அங்கமாக அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. காலி முகத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் போது பட்டம் ஏற்றும் கொண்டாட்டமும் அடங்கியிருந்தது. அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கான AYATI தேசிய நிலையத்துடன் பணியாற்றி, Down syndrome தொடர்பில் விழிப்புணர்வை மேம்படுத்தல் மற்றும் அந்த குறைபாட்டுடன் வாழும் சிறுவர்களுடன் பொழுதை கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

HOF'இன் கொண்டாட்டத்தில், Trisomy 21 இலுள்ள மேலதிக குரோமோசோம்களை பிரதிபலிக்கும் வகையில் 100 பட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், விழிப்புணர்வூட்டல் மற்றும் ஏற்றுக் கொள்ளும் திறன் ஆகியவற்றில் சிறுவர்கள், குடும்பங்கள் மற்றும் நண்பர்களை ஒன்றிணைக்கும் வகையில் அமைந்துள்ளது. Hemas Group க்கு, Down syndrome உடன் வாழும் ஒவ்வொரு குழந்தையின் துணிச்சலையும் மகிழ்ச்சியையும் மகிழ்விக்கும் ஒரு சந்தர்ப்பமாக இந்த நிலையைச் சுற்றியுள்ள தவறான கருத்துக்களை அவிழ்த்து அவற்றை மாற்றுவதற்கான ஒரு தனித்துவமான முக்கியமான வாய்ப்பாக இந்த கொண்டாட்டம் அமைந்திருந்தது.

நிகழ்வு பற்றி, Hemas Outreach Foundation மற்றும் Ayati Trust Sri Lanka இன் நிறைவேற்று பணிப்பாளர் ஷிரோமி மசகொரல கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நிகழ்வின் மூலம், குழந்தைகள் தங்களைப் பற்றியும் ஒருவருக்கொருவர் கொண்டாடுவதை அனுபவிப்பது மட்டுமல்லாமல், இந்த குழந்தைகளின் தனித்துவமான தன்மையின் பிரகாசமான சான்றாக மக்கள் அதை அங்கீகரிப்பார்கள் என்பதும் எங்கள் நம்பிக்கை. இதுபோன்ற முயற்சிகள் எவ்வாறு உள்ளடக்கம், பன்முகத்தன்மை மற்றும் கரிசனை ஆகியவற்றை வளர்ப்பதற்கான சரியான திசையில் ஒரு படியாக அமையும் என்பதை நாங்கள் நிரூபிக்க விரும்புகிறோம். இந்த குழந்தைகள் எவ்வளவு திறமையானவர்கள் மற்றும் நிறைவானவர்கள் என்பதை அங்கீகரிக்க, சமூகத்தின் மற்ற பகுதிகள் ஒரே மாதிரியான கருத்துக்களிலிருந்து விடுபடுவது முக்கியம்." என்றார்.

2021ஆம் ஆண்டு Hemas Outreach Foundation இனால், இலங்கையின் முதலாவது அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கான தேசிய நிலையமான AYATI உடன் இணைந்து, சமூக செயற்பாடாக அமைந்துள்ள 'Eka Se Salakamu', அங்கவீனமுற்ற சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தும் அமைப்பாக அமைந்துள்ளது. அனைவரையும் உள்ளடக்கியதன் அவசியத்தையும், குறைபாடுகளை இழிவுபடுத்துவதையும் ஆழமாக உணர்ந்த இந்த இயக்கம், இன்றைய சமூகத்தில் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையை ஊக்குவிக்கும் Down syndrome உடன் வாழும் குழந்தைகளின் மறைந்திருக்கும் திறன்களை வளர்க்கும் நாட்டின் மிகவும் முன்னோடி அமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

## ஏற்றுமதியாளர்கள் பிராந்திய வழங்குநர்களுடன் நேரடியாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு

# "ஒரு புரட்சிகரமான மாற்றம்"





இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்கும் இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும் ஒரு புரட்சிகரமான முயற்சியாக, உள்ளூரில் உள்ள வழங்குநர்கள், வணிகத்துறையினர் மற்றும் தொழில்முனைவோர் போன்றோரை, அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்களுடன் இணைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான தொடர்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த முயற்சி, ஏற்றுமதி மேம்பாட்டை விரிவடையச் செய்வதற்கும், நாடளாவிய ரீதியில் மறைந்திருக்கும் திறமைகள்,வளங்களைப் பயன்படுத்துவதற்குமான இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையின் (NCE) இலக்கை உள்ளடக்கியதாக அமைகிறது.

விரிவாக்கல் முயற்சியின் ஓர் அங்கமாக, இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE), யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற நகரங்கள் மற்றும் அந்த நகரங்களை அண்டிய பகுதிகளுக்கான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஜயங்களை மேற்கொண்டிருந்தது. அங்கே 200 க்கும் அதிகமான விவசாயத்துறையைச் சேர்ந்தவர்கள், வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியில் ஈடுபட்டிருப்போரை இணைத்துக்கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமைந்திருந்தது. இங்கே இடம்பெற்ற சந்திப்புகளில், பரஸ்பர மற்றும் சுமுகமான கலந்துரையாடல்கள், வாய்ப்புகளை அடையாளம் காணல் போன்றவை குறித்த விடயங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், கண்டி மற்றும் பொலன்னறுவை போன்ற நகர்ப்பகுதிகளுக்கான எதிர்காலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் எந்த நகர்ப்புறமும் பின்தங்கியிருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதாக அமைகிறது.

இந்தப் பகுதிகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான மூலோபாய ஒத்துழைப்புகள் இந்த முயற்சியின் செயல்திறன் மற்றும் விரிவாக்கல் திட்டங்களை மேம்படுத்தும் முகமாக, இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) முக்கிய பிராந்திய வணிக அமைப்புகளுடன் முறையான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MOU) கையெழுத்திட்டுள்ளது. இவற்றில் யாழ்ப்பாண முகாமையாளர்கள் பேரவை, திருகோணமலை மாவட்ட வர்த்தக மற்றும் உற்பத்தித் தொழில் சபை மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் உற்பத்தித் தொழில் சபை ஆகியவை அடங்கும்.

இந்த விரிவாக்கல் திட்டம் வளர்ச்சி, பிற பிராந்தியங்களில் உள்ள தொழில்சார் அமைப்புகள் மற்றும் உற்பத்தித் தொழில் அமைப்புகளுடனும் மேலதிகக் கூட்டாண்மைகளை உருவாக்கவும் இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) திட்டங்களை வகுத்துள்ளது. இந்த ஒத்துழைப்புகள் ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், உள்ளூரில் அவற்றின் நிலையை உறுதி செய்யவும், பிராந்தியத்தின் ஒருங்கிணைந்த திறன் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி தயார்நிலை திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கை வகிக்கிறது.

பிராந்திய வர்த்தக சபைகளுடன் கைகோர்த்துச் செயல்படுவது, பரஸ்பர நம்பிக்கை மற்றும் சமூக ஒருங்கிணைப்பை அபிவிருத்தி செய்வதில் முன்னிலை வகிப்பதோடு, அடிமட்ட அளவிலான முயற்சிகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை நல்கக்கூடியதாகவும் இருக்கிறது.

ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் பெறக்கூடிய உச்ச நன்மைகள் இந்தத் திட்டத்தின் மிகவும் உறுதியான நன்மைகளில் ஒன்று, பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் ஏற்றுமதியாளர்கள் பிராந்திய வழங்குநர்களிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்கக்கூடிய மற்றும் அவ்வாறாக ஏற்றுமதி சந்தைக்கு விடப்பட்ட பொருட்களைத் தாமே மீள்-கொள்வனவு செய்யும் (Buy-back) வசதிகளை எளிதாக்குவதாகும். இந்த அணுகுமுறை உற்பத்தியாளர்களுக்கான சந்தையைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இடைத்தரகர்களையும் அவர்களின் கட்டணங்களைக் குறைப்பதன் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கான கொள்முதல் செலவுகளையும் குறைக்கிறது.

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) தலைவர் இந்திரா கௌஷல் ராஜபக்ஷ கூறுகையில், "ஏற்றுமதியாளர்கள் பிராந்திய வழங்குநர்களுடன் நேரடியாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு என்பது ஒரு புரட்சிகரமான மாற்றம். இது செயல்முறையை எளிதாக்குவதோடு, அதிகப்படியாக ஏற்படும் விரயத்தைக் கட்டுப்படுத்தி, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது. ஆகவே இத்திட்டத்தின் வாயிலாக நாம் ஏற்கனவே உறுதியான மற்றும் நேர்மறை விளைவுகளைக் காண்கிறோம், அத்தோடு இது ஒரு தொடக்கம் மட்டுமே" என்று கூறியுள்ளார்.

ஆர்வத்துடன் கூடிய அங்கத்துவம் மூலம் தொடக்கநிலை நிறுவனங்களுக்கு ஊட்டமளித்தல் வளர்ந்து வரும் வர்த்தக நிறுவனங்களை பிரதான ஏற்றுமதி பொருளாதாரத்திற்குள் கொண்டுவரும் முயற்சியின் ஒரு அங்கமாக, இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) ஒரு புதுமைப் புகுத்தலுடன் "ஆர்வத்துடன் கூடிய அங்கத்துவம்" ("Aspiring Membership") எனும் ஒரு பிரிவை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த உறுப்பினர் சேர்க்கையானது, தொடக்கநிலை நிறுவனங்கள் மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு - குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு கிடைப்பதோடு, ஏற்றுமதி சந்தையில் நுழைவதற்கான முறையான வழியை ஏற்படுத்தித் தருகிறது. இணைத்துக்கொள்ளும் உறுப்பினர்கள் அனைவரும் சிறப்பு சான்றிதல்களைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, பல்வேறு தொழில்நுட்ப மற்றும் வலையமைப்புகளுக்குள் பிரவேசித்து பல்வேறு பயன்தரக்கூடிய வாய்ப்புகளையும் அனுபவிப்பார்கள்.

இந்த ஆர்வமுள்ள உறுப்பினர்கள், ஏற்றுமதிசார் தயார்நிலையின் அத்தியாவசியக் கூறுகளான பொதியிடல், வணிகச் சின்னம், பெறுமதிசார் விருத்தி, ஏற்றுமதி விதிமுறைகள், வணிக மற்றும் தரநிர்ணயச் சான்றிதழ் வழங்குதல் போன்ற துறைகளில் சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். மேலும், அபிவிருத்தி நிதி, வளர்ச்சிக்கான வளங்கள் மற்றும் பல்வேறு நிதி உதவிகளை உறுப்பினர்களுக்கு வழங்குவதை உறுதிசெய்ய, இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை கூட்டாளர் வங்கிகளுடன் நெருக்கமாக செயலாற்றி வருகிறது.

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) பொதுச் செயலாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி ஷிஹாம் மரிக்கர் அவர்கள், "இந்த முயற்சி நாடு தழுவிய அளவில் இலைமறைகாயாய் இருக்கும் தொழில்முனைவோரது திறமைகளை வெளிக்கொணர்வதில் அரும்பணியாற்றுகிறது. 'நாட்டின் பல பகுதிகளில் அபரிமிதமான திறன்கள், ஆற்றல்கள், இலட்சிய நோக்கு மற்றும் புதுமையான யோசனைகள் உடனான தனிநபர்கள் உட்பட ஏராளமான ஆற்றல் வளம் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் அவர்கள் வளங்களை அணுகுவதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த முயற்சியானது, இவ்வாறான திறமைகளைக் கண்டறியவும், வெளிக்கொணரவும், அவர்களை எங்கள் உறுப்பினர்களுடன் இணைக்கவும், அவர்களுக்கு வளர்ச்சிக்கான தளத்தை அமைத்துக்கொடுக்கவும் வழிசமைக்கிறது" என்று கூறுகிறார். "நாங்கள் வழங்கும் வலையமைப்பு வசதிகள், வாய்ப்புகள், தெரிவுநிலை மற்றும் நடைமுறை உதவிகள் போன்றவை, ஏற்கனவே சிறு வர்த்தகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்போரை எதிர்கால ஏற்றுமதியாளர்களாக மேம்பாடடையச் செய்துள்ளன" என்று அவர் மேலும் கூறினார்.

ஏற்றுமதி திறனை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு தேசிய நோக்கு

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையின் (NCE ) விரிவாக்கல் நடவடிக்கைத் திட்டம் இலங்கையில் ஒரு பரந்த மற்றும் மிகவும் அனைத்தையும் உள்ளடக்கிய ஏற்றுமதி தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிராந்திய உற்பத்தியாளர்களை தேசிய ஏற்றுமதியாளர்களுடன் இணைப்பதன் மூலமும், தொழில்நுட்ப திறன்களை வலுப்படுத்துவதன் மூலமும், சந்தைகள் மற்றும் நிதிக்கான அணுகலை எளிதாக்குவதன் மூலமும், சர்வதேச தரங்களை பூர்த்தி செய்யும் மற்றும் உலகளாவிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் கொண்ட புதிய தலைமுறை போட்டி ஏற்றுமதியாளர்களை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

புதிய கூட்டாண்மைகள் மற்றும் விரிவாக்கப்பட்ட தொடர்புகளுடன் கூடிய இந்தத் திட்டம் நாடு தழுவிய அளவில் வளர்ந்து வருவதால், நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ளவர்கள் இலங்கையின் ஏற்றுமதித் துறையின் வெற்றியில் பங்கேற்கவும் பயனடையவும் முடியும் என்பதை உறுதி செய்யும் வகையில், அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிசார் வளர்ச்சிக்கான அதன் அர்ப்பணிப்பை இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை ( NCE ) மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த திட்டத்தில் இணைந்து பயன்பெற அல்லது ஒத்துழைக்க ஆர்வமுள்ள அனைத்து மறைமுக ஏற்றுமதியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையைத் தொடர்பு கொள்ளுமாறு அதன் இயக்குனர் சபை அன்புடன் வரவேற்கிறது. மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து nce.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து அதில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களைப் பார்வையிடவும்.

பாகிஸ்தான்

இந்தியாவை தாக்க

# “அணு ஆயுதங்கள் தயார்”

இந்தியாவை தாக்க அணு ஆயுதங்கள் தயாராக இருப்பதாக, பாகிஸ்தான் அமைச்சர் ஹனிப் அப்பாசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

“சிந்து நதி நீரை இந்தியா நிறுத்தினால் அந்நாடு போருக்குத் தயாராக வேண்டும். நம்மிடம் உள்ள இராணுவ ஆயுதங்களும், ஏவுகணைகளும் பார்வைக்கு வைக்க அல்ல.

“நாட்டின் எந்தெந்த பகுதிகளில் நாம் அணு ஆயுதங்கள் மறைத்து வைத்துள்ளோம் என்று யாருக்கும் தெரியாது. நம்மிடம் உள்ள அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகள்



அனைத்தும் இந்தியாவை நோக்கி மட்டுமே உள்ளன. இந்தியாவைத் தாக்கக் கோரி, ஷாஹீன், கஸ்னவி ஏவுகணைகள் மற்றும் 130 அணு ஆயுதங்கள் தயாராக உள்ளன” என்றார்.

கனடா

பஹல்காம் தாக்குதல்:

## கனடாவும் எச்சரிக்கை



பஹல்காம் தாக்குதலை அடுத்து ஜம்மு-காஷ்மீர் பயணத்தைத் தவிர்க்குமாறு, கனடா தனது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அட்டாரி வாகா எல்லை மூடப்பட்டதைச் சுட்டிக்காட்டி இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதி கொந்தளிப்புடன் உள்ளதால் பயணத்தைத் தவிர்க்குமாறும், கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான்

மருந்து பற்றாக்குறை

## அபாயத்தில் சிக்கும் பாகிஸ்தான்

ஜம்மு- காஷ்மீரில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்த இந்தியா எடுத்த முடிவுக்குப் பதிலடியாக இந்தியாவுடனான அனைத்து வர்த்தகத்தையும் பாகிஸ்தான் நிறுத்தி வைத்துள்ளது.

பாகிஸ்தான் தனது மருந்து மூலப்பொருட்களில் 30 முதல் 40 சதவீதம் வரை இந்தியாவை நம்பியுள்ளது. தற்போது இந்தியாவுடன் வர்த்தகத்தை நிறுத்தியதால்



மருந்து பற்றாக்குறையில் சிக்கும் அபாயத்தில், பாகிஸ்தான் உள்ளது.

இதையடுத்து, மருந்து விநியோகத்தைப் பாதுகாக்க பாகிஸ்தான் ‘அவசர’ நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் அவசரகால தயார்நிலை நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் சுகாதார அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

இது குறித்து பாகிஸ்தான் மருந்து ஒழுங்குமுறை ஆணையம் கூறும்போது, “எங்கள் மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மாற்று வழிகளை நாங்கள் இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்” என்று தெரிவித்துள்ளது.

தெலுங்கானா

ஹைதராபாத்தில் உள்ள

## பாகிஸ்தானியர்களை வெளியேறுமாறு உத்தரவு

தெலுங்கானா மாநில தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள 213 பாகிஸ்தானியர்களும், ஞாயிற்றுக்கிழமை 27ஆம் தேதி இரவுக்குள் பாகிஸ்தான் திரும்ப வேண்டும் என, ஹைதராபாத் டிஜிபி அலுவலகத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சக உத்தரவின் பேரில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக, டிஜிபி அலுவலகம் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஹைதராபாத் நகரில் 213 பாகிஸ்தானியர்கள் உள்ளனர். இவர்களில் சிலர் சுற்றுலா விசா, சிலர் மருத்துவ விசாக்களிலும் வந்து தங்கி உள்ளனர்.

இவர்களின் விசாக்கள் இரத்து செய்யப்பட்டு விட்டதால், ஞாயிற்றுக்கிழமை (27)



இரவுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என டிஜிபி அலுவலகத்தில் இருந்து அந்த 213 பேருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் தற்போது வெறும் 4 குடும்பத்தினர் மட்டுமே ஹைதராபாத்தில் தங்கி உள்ளனர். இவர்களும் ஞாயிற்றுக்கிழமை(27) இரவுக்குள் பாகிஸ்தான் செல்ல வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜம்மு–காஷ்மீர்

ஜம்மு–காஷ்மீர் தாக்குதல்:


## விசாரணை கைமாறியது

உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின்பேரில் பஹல்காம் தாக்குதல் விசாரணையை ஜம்மு- காஷ்மீர் பொலிஸாரிடம் இருந்து தேசிய புலனாய்வு முகமை கையில் எடுத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்தில் முகாமிட்டு தடயவியல் நிபுணர்கள் உதவியுடன் ஆதாரங்கள் திரட்டப்படுகின்றன.

மேலும், தாக்குதலை நேரில் பார்த்தவர்களிடம் தகவல்களை கேட்டுப்பெற்று விசாரணை தீவிரப்படுத்த தேசிய புலனாய்வு முகாமை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.





கோப்பா டெல் ரே:

# றியல் மட்ரிட்டை வென்று சம்பியனானது பார்சிலோனா

ஸ்பானிய கோப்பா டெல் ரே தொடரில் பார்சிலோனா சம்பியனாகியது. செவில்லியில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற றியல் மட்ரிட்டுடனான இறுதிப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் மேலதிக நேரத்தில் வென்றே பார்சிலோனா 32ஆவது தடவையாக சம்பியனாகியது.

பார்சிலோனா சார்பாக பெட்ரி, பெரன் டொரேஸ், ஜூலெஸ் கூன்டே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

மட்ரிட் சார்பாக கிலியான் மப்பே, ஒளரலின் துச்சாமி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## ‘யாழ். பாசையூரில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை’



யாழ்ப்பாணம் பாசையூரில் விளையாட்டு மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாசையூருக்கு சந்திரசேகர் வெள்ளிக்கிழமை (25) கண்காணிப்பு பயணம் மேற்கொண்டபோதே மேற்படி கருத்தை அவர் வெளிப்படுத்தினார்.

பாசையூரிலுள்ள சென். அன்ரனிஸ் மைதானத்துக்கு சென்றிருந்த சந்திரசேகர், மைதானத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியை வழங்கினார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

## எவெர்ற்றனை வென்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(26) நடைபெற்ற எவெர்ற்றனுடனான



போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கொலஸ் ஜக்சன் பெற்றிருந்தார்.



இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்

## பங்களாதேஷுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றுமா சிம்பாப்வே?

பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்டானது சட்டோகிராமில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வே வென்ற நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் பங்களாதேஷ் உள்ளது.

பங்களாதேஷ் குழாமில் அனாமுல் ஹக் இணைத்துக் கொள்ளப்பட்ட நிலையில் அணியில் மஹ்முடுல் ஹஸன் ஜோயை அவர் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர நஹிட் ரானாவுக்குப் பதில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை தன்ஸிம் ஹஸன் மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சிம்பாப்வேயை வெல்வதற்கு ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களிடமிருந்து ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுவதுடன், அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம் ஆகியோரிடமிருந்து நீண்ட இனிங்ஸ்கள் எதிர்பார்கப்படுகின்றன.

மறுப்பக்கமாக சிம்பாப்வே அணியானது தமது அணித்தலைவர் கிறேய்க் எர்வினிடமிருந்து நீண்ட இனிங்ஸை எதிர்பார்ப்பதுடன், விக்கெட் காப்பாளர் நயஷா மயாவோவும் தன்னைத் திருத்திக் கொள்வாரென எதிர்பார்க்கும்.

ஐ.பி.எல்.

## பஞ்சாப் – கொல்கத்தா போட்டி முடிவில்லை

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), கொல்கத்தாவில் சனிக்கிழமை (26) நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுக்கும், நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸுக்குமிடையிலான போட்டியின் இரண்டாவது இனிங்ஸின் ஒரு ஓவருடன் மழை வந்த நிலையில் போட்டியில் முடிவேதும் பெறப்படவில்லை.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், பிரப்சிம்ரன் சிங் 83 (49), பிரியன்ஷ் ஆர்யாவின் 69 (35), அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின்



ஆட்டமிழக்காத 25 (16), ஜொஷ் இங்லிஸின் ஆட்டமிழக்காத 11 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 201 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் வைபவ் அரோரா 4-0-34-2, சுனில் நரைன் 4-0-35-0, அன்ட்ரே ரஸல் 3-0-27-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 202 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, ஒரு ஓவரில் விக்கெட் இழப்பின்றி ஏழு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டிருந்தது.

இந்நிலையில் ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 28, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.